# கொல்லிமலையில் பெறக்கரை நாட்டின் ஒப்பாரிப்பாடல்

*செ.ஆனந்தி*
இரண்டாமாண்டு முதுகலைபட்ட மாணவி, தமிழ்த்துறை
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வெட்டுக்காடு, சேந்தமங்கலம், நாமக்கல்
DOI: https://doi.org/10.5281/zenodo.13783143

***ஆய்வுச் சுருக்கம்***

*நாட்டுப்புற மக்களின் வாழ்க்கையோடு ஒன்றிணைந்தது ஒன்று தான் நாட்டுப்புற பாடல்கள் நாட்டுப்புற மக்களின் வாழ்க்கையோடு இணைந்த ஒன்றுதான் நாட்டுப்புற பாடல்கள் நாட்டுப்புற மக்களின் வரலாற்றோடும், பண்பாட்டோடும், நம்பிக்கையோடும், ஒப்பாரி என்ற ஒன்று பிணைந்துள்ளது. ஒப்பாரி சாதாரண சிறிய கிராமங்களில் செவி வழியாகவும், ஒப்பாரி பாடலாகவும் இன்றளவும் பயன்படுத்தப்படுகிறது. நாமக்கல் மாவட்டம், கொல்லிமலை தாலுகாவில் கீழ் பெறக்கரை நாடு என்னும் கிராமம் அமைந்துள்ளது இதில் ஒப்பாரி பாடலை பற்றியும், பல வகையான ஒப்பாரி இருப்பதையும் இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.*
***கலைச்சொற்கள்:*** *ஒப்பாரி கொல்லிமலை அழுகை.*

**முன்னுரை**

*ஒவ்வொரு மொழிகளிலும் எழுத்து தோன்றுவதற்கு முன்னராகவே வாய்மொழி பாடல்கள் தோன்றின. வாழ்க்கை அனுபவங்களை நேரடியாக எடுத்துக் கூறுகின்ற நாட்டுப்புற மக்களின் கவலைகளின் முதலில் தோன்றுவது ஒப்பாரி பாடல்கள் தான். இதன் மூலம் ஒப்பாரி பாடலின் முக்கியத்துவம் குறித்து விரிவாக காண்போம்.*

**ஊர் அறிமுகம்**

*நாமக்கல் மாவட்டம், கொல்லிமலை தாலுகாவில் பெறக்கரை நாடு என்னும் ஊர் அமைந்துள்ளது. இந்த ஊராட்சியில் கீழ் மொத்தம் பத்து ஊர்கள் உள்ளன. அவை ஊர் புறம், செட்டிக்காடு, வாழக்காடு, உள்பரப்பு, வடகாடு, கையங்குடை, புதுகாது, தோட்டி காடு, கலூர் என்னும் ஊர்கள் அடங்கியுள்ளன.*

**ஒப்பாரியின் விளக்கம்**

*ஒப்பாரி என்பது தமிழ் நாட்டுப் பாடல் வகைகளில் ஒன்று கிராமத்து மக்கள் இசையானது பின்னிப் பிணைந்து காணப்படுகிறது. தாய், தந்தை, கணவன், பிள்ளை, உற்றார், உறவினர் எவரேனும் இறந்து விட்டால் ஒருவருடைய உள்ளத்தில் இருந்து எழுகிற துன்ப உணர்வை வெளிக்காட்ட ஒப்பாரி பாடல் பாடப்படுகிறது.*

*நெருங்கிய உறவினர்கள் இறக்கும் பொழுது இழப்பின் துயரம் தாங்கிக் கொள்ள முடியாமல் பெண்கள் இறந்தவர்களின் சிறப்புகளையும் அவர்களை இழந்தால் தான் அடையப் போகும் துன்பத்தையும் பாடல் மூலம் வெளிக்காட்டுவார்கள். ஒப்பாரி என்பதனை ஒப்பு + ஆரி என்று பிரித்துக் கொள்ளலாம்.*

**ஒப்பாரி பாட காரணம்**

*இறந்து போனவரின் ஆத்மா சாந்தி அடைவதற்கும், ஒப்பாரி பாடாவிட்டால் தீமை உண்டாகும் என்பதையும் இறந்து போனவரின் உடல் சிறப்பாக பயன்பட்டு மறு உலகத்திற்கு செல்ல உதவும் என்று கூறலாம்.*

**மகனை இழந்த தாய் பாடுவன**

*இறந்தோர்க்குத் தீ மூட்ட வேண்டும் என்பதால் பல்வேறு வகையான கட்டைகளை*

அடுக்கும் வழக்கம் உண்டு. இதில் பெண்களுக்கு உரிமை மறுக்கப்படுவதாலும், ஆண்மகன் பெறாதவர்களுக்கு உடன் பிறந்தானின் மகன் அல்லது ஆண் பிள்ளை கொள்ளி வைத்தல் வேண்டும் என்ற முறையைப் பின்பற்றுகின்றனர். இந்த நிலையில் மகன் இறந்ததை நினைத்து தாய்,

**எட்டு வண்டி கட்டி வெட்டி**
**எல்லையில் தீ மூட்டி-என்னோட**
**எதிராளி புள்ளி வந்து-என்னோடத்**
**தாயாருக்கு கொள்ளி வச்சான் என்னோடத்**
**தேடுன்னா வராது திருநாமம் மையாது**
**- - - - - - - - - - - - - - - - - - -**
**- - - - - - - - - - - - - - - - - - -**
**பக்கம் கொள்ளி வச்சா என்னோட பாடையும் நவுந்து வரும்**[1]

என்று அழுது தாயார் புலம்புகிறாள் மகன் என்பவன் பலவிதங்களில் பல்வேறு சூழ்நிலைகளில் முக்கியத்துவம் பெற்று சிறந்து விளங்குகின்றனர்.

## குழந்தை இழந்த தாய் பாடுவது

தாலாட்டால் குழந்தையின் இதயத்தை தொட்டுவிடும் தாய்மை குழந்தை மறைந்த பின்பு தன்னால் தான் குழந்தையை கவனிப்பு போதவில்லை அதனால் தான் இறந்தது என்று கூறி புலம்பும் தாய்ப்பாசம் விளக்க முடியாதது. சீராட்டி வளர்த்த குழந்தை இறந்ததை எண்ணிய தாய்,

**உண்ட கற்பூரமும் உருகாதுன்னு எண்ணியிருந்தேன்**
**ஒடக்கரை தண்ணி வந்து உறுதலை என்ன**
**கட்டிக் கற்பூரமும் கரையாதுன்னு வாங்கி வச்சேன்**
**கானாரு தண்ணி வந்து கரைச்சது என்ன**[2]

என்று தாய் புலம்புகிறான்.

குழந்தை கல்வியில் சிறந்து விளங்க வேண்டும் என்று ஒவ்வொரு தாயும் நினைப்பால் ஒரு தாய் குழந்தையின் கல்விக்காகத் தான் கண்ட கனவு வீணாகி விட்டதே என்பதை,

**சந்தன பள்ளிக்கூடம் சட்டத்துக்குப் படிக்கவச்சி**
**சாமி இடம் சேர்ந்ததென்ன குங்குமம் பள்ளிக்கூடம்**
**கோரட்டுக்கு படிக்கவெச்சி கோயில் இடம் சேர்ந்ததென்ன**[4]

என்று புலம்புவதை காணலாம்.

## கணவனுக்காக மனைவி பாடுவது

கணவனை இழந்தோர்க்கு காட்டுவது இல் சமுகத்தில் ஒரு விதவை பெண்ணின் வாழ்க்கை முறை மிகவும் அவலத்திற்குரியதாகும். கணவனை இழந்தால் அவளுக்கு பூவும், பொட்டும் சொந்தமில்லை. என்று இவ்வளவு துன்பத்திற்கும் ஒரு பெண் ஆளாகிறாள் கணவன் இறந்தவுடன் மனைவி பட்டுப் போன மரம் போல ஆகிவிடுகின்ற நிலையினை,

**மஞ்ச நட்டா பிஞ்சிரங்கும்**
**மணல் இறைச்சா வேர் இறங்கும்**
**வேர் இறங்கும் நாளையில-எனக்கு**
**வேதனையே வச்சீங்க**
**இஞ்சி வெச்சாப் பிஞ்சிரங்கும்**
**எருவு எறைச்ச வேரிரங்கும்**
**வேரிரங்கும் நாளையில - எனக்கு**
**வேதனையை வச்சீங்களே**[5]

என்ற பாடல்வரிகளால் அறியலாம்.

குழந்தையோடு கொஞ்சி மகிழுந்து குதூகலமாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற நாளில், கணவன் ஏதோ காரணமாக மாண்டு விட்டதை எண்ணி மனைவி கதறுகின்ற காட்சி,

**பட்டணத்துப் புஸ்தகாலம்**
**பழனிமலைப் போனாலாம்**
**பாத்துக் கணக்கெழுத**
**பாலகனும் மையெழுத**
**மையெழுதும் திண்ன மேல**
**மாடப்புறா சூதாட்டம்**
**சுரக்க போலாமா**[6]

என்று மனக்கண்முன் தோன்றுவது போன்று பாடுகிறாள்.

## இலக்கியங்களில் ஒப்பாரி

தொல்காப்பியத்தில் புறத்திணைப் பகுதியில் போர் வீரர்கள் போரில் மாண்ட போது தாயோ, மனைவியோ, தன் மகனுக்காக அழுது புலம்புவதை புறத்திணைப் பகுதி மூலம் அறிகிறோம் இதனை தொல்காப்பியர்,

**இளிவே இழவே அசைவே வறுமை**
**என விளிவில் கொள்கை அழுகை நான்கே**[7]

என்று அழுகைக்கு இலக்கணம் கூறியுள்ளார் தொல்காப்பியர்.

அழுகை என்பது கண்களிலிருந்து நீரை சிந்தும் உணர்ச்சிவசப்பட்ட மனிதனின் ஒரு நிலை. அழுகை என்பது ஒரு உணர்ச்சி வெளிப்பாடு.[8]

மற்ற அழுகையின் போது சுரக்கும் கண்ணீரும், உணர்ச்சி வயப்பட்ட நிலையில் சுரக்கும் கண்ணீரானது அதிக அளவு கொண்டது.

**முடிவுரை**

மக்களுடைய பண்பாட்டை பிரதிபலிக்கும் கண்ணாடியாக ஒப்பாரி பாடல் அமைகிறது. ஒரு சமுதாயத்திலே நீண்ட காலமாக புழக்கத்தில் இருந்து வரும் அனுபவ குறிப்பு ஆகும். ஒப்பாரியை பயன்படுத்துவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைந்து கொண்டே போனாலும் கொல்லிமலையில் ஊர்புறம் என்ற கிராமங்களில் பல ஒப்பாரியை இன்றளவும் பாடிக்கொண்டு இருப்பதையும் அவற்றுள் பலவகையான ஒப்பாரி பாடல்கள். மக்கள் வாழ்க்கையில் ஒன்றோடு ஒன்று, பின்னிப் பிணைந்துள்ளது என்பதை இக்கட்டுரையின் வாயிலாக உணர முடிகிறது.

**சான்றெண் விளக்கம்**

1. தகவளாளர். கலாமணி, வயது. 30, ஊர்புறம், கொல்லிமலை.
2. தகவளாளர். ரஞ்சிதம், வயது. 40, செட்டிக்காடு, கொல்லிமலை.
3. தகவளாளர். மணிமேகலை, வயது. 30, செட்டிக்காடு, கொல்லிமலை.
4. தகவளாளர். ஜோதிமணி, வயது. 37, ஊர்புறம், கொல்லிமலை.
5. தகவளாளர். செல்வம், வயது. 50, ஊர்புறம், கொல்லிமலை.
6. மேலது.,
7. திருஞானசம்பந்தர்.ச, தொல்காப்பியம் பொருளதிகாரம், நூ.249.
8. https://ta.m.wikipedia.org/wiki

**துணை நூற்பட்டியல்**


1. திருஞானசம்பந்தம்.ச, தொல்காப்பியம் பொருளதிகாரம், கதிர்பதிப்பகம், திருவையாறு
2. https://ta.m.wikipedia.org/wiki.